திரு. இர. சிவலிங்கம், *M. A., Dip- in-Ed.,*
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

இன்றைய சமுதாய வாழ்க்கையின் கோலங்களில் ஒன்று அடிக்கடி எடுக்கப்படும் விழாக்களாகும். இவ் விழாக்காலங்களிற் பிரமுகர்களும் பேச்சாளர்களும், கவிஞர்களும் அரசியல்வாதிகளும், கூடியுள்ள மக்களின் குதூகலத்திற்காகவும், சிந்தனைக்காகவும் பல்வேறு கருத்துக்களை வெளியிடுவர். மக்களைக் கவருவதற்காகக் கருத்துரைக்கும் பான்மைகளில், வாய்மொழியாக சொன்மாரி பொழிதல் தொன்று தொட்டு செல்வாக்கடைந்துள்ளது. இன்று எழுத்து வழியாக எண்ணற்ற கருத்துக் குவியல்கள் பெருகி வரினும், வாய் மொழிக்குரிய செல்வாக்கும், சிறப்பும் சற்றேனும் குன்றிவிடவில்லை. மொழி ஏட்டில் வளர்ந்தாலும், நாவிலேயே வாழ்கிறது. மொழிக்குரிய இயல்பே மொழிதலாகும். ஆதலின் இன்று மேடைத் தமிழ் சிறப்புற்று விளங்குகிறது. சில சமூகங்களில் ஏட்டு மொழியைவிட மேடை மொழியே, மக்களின் ஆர்வத்தையும், ஆவலையும் வளர்க்கிறது. நல்லதோர் சொற்பொழிவைக் கேட்கப் பலர் குழுமுவர். அதனை அச்சிட்டு வெளியிட்டால், வாங்குவோர் தொகை குறைவாகவே இருக்கும். வாங்கியோரில் வாசிப்போர் தொகை இன்னுங்குறைவாகவே இருக்கும். அச்சிட்ட சொற்பொழிவை வாங்குவோர்கள், சொற்பொழி வாளரின், உரையாற்றுந்திறத்தை அறிந்ததாலோ, அன்றி பிறர் கூறக்கேட்டதாலோதா வாங்கு வார்கள்

அண்மைக் காலத்தில், சொற்பொழிவாளர்களோடு, போட்டி போடுவதற்காக, கவிஞர்கள் முன்வந்துள்ளார்கள். காலப்போக்கிற் சொற்பொழிவுகளை விட, கவியரங்கங்களுக்கே முதன்மையும், முக்கியத்துவமும் கிட்டக்கூடும். தற்போது நடைபெறும் விழாக்களிற் கவியரங்கம் தவிர்க்க முடியாத நிகழ்ச்சியொன்ருக மாறியுள்ளது. நாலைந்து கவிஞர்களின் கவி மழையைக் கேட்டுக் களிக்கும்போது, மக்கள் ஓரிரண்டு சொற்பொழிவாளர்களுக்கு மேல் சகிக்க முடியாது துயருறும் நிலை இன்றைய விழாக்களிற் காணக் கூடியதாய் உள்ளது. நமது கவிஞர்களுக்கு, குறிப்பாக, அவர்களது மேடைக்கவிதைகளுக்கு நல்ல காலம் பூத்துள்ளது. கவிச்சொல் கேட்டுக்களிப்போரின் எண்ணிக்கை பெருகி வருகிறது. மேடையேறி, கவி மழை பொழிந்து விழாக்களுக்குச் சிறப்பும், குழுமியோருக்குக் குதூகலமும் வழங்கும் முன்னிலைக் கவிஞர்களுள் கவிஞர் கந்தவனம் தலைநிமிர்ந்து நிற்கிருர். நண்பர் கந்தவனத்தின் பெயருக்குப் பின்னுல் பல்கலைக்கழகப் பட்டமொன்று ஒட்டிக்கொண்டிருப்பதைப் போல, பெயருக்கு முன்னுலும் 'கவிஞன்' என்ற பட்டம் நிலை பெற்று விட்டது. பின்னுல் இருப்பது பல நூல்கள் கற்றுப் பரீட்சையில் தேர்ந்து பெற்றது. முன்னுல் இருப்பது கவிமொழிந்து பெற்றது. பின்னது பல்கலைக்கழகம் வழங்கியது; முன்னது மக்கள் சூட்டியது.

இந்நூலிற் பல மேடைகளில், முழக்கத்தோடு மொழிந்த கவிதைகளுள் ஐந்து இடம் பெறுகின்றன. 1963-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை யாத்துப் பொழிந்த கவிதைகள் இதில் அடங்கியுள்ளன. மலைநாட்டில் மாத்தளை, நாவலப்பிட்டி ஆகிய இரு இடங்களிலும் அரங்கேற்றப்பட்ட கவிதைகள் முதலிரண்டும். மூன்ருவது நீர்கொழும்பிலும், மற்றிரண்டும் யாழ்ப்பாணத்திலும் அரங்கேற்றப்பட்டவை. இரண்

மதுரகவி இ. நாகராஜன்

அவர்களின்

# பதிப்புக் கவி

முன்னை முதியவரின்
முன்னோக்கை நன்னெறியை
பின்னைப் புதுமையுடன்
பின்னிப்பல் லாண்டுகளாய்
ஓங்கி வளருகின்ற
ஒண்டமிழின் உண்மைகளை
பாங்காய் அறிந்திந்தப்
பாரதனைச் சீர்படுத்தும்
நோக்கைத்தன் நோக்காக்கி
நுண்மை நிலவிடவே
ஆக்கந் தனைக்கொடுக்கும்
ஆன்றஉயர் லட்சியத்தின்
கோட்டில் நிலைக்கின்ற
யாழிலக் கியவட்டக்
கொள்கை தனையீங்கு
கோலத் தமிழ்கொண்டே
அள்ளிக் கவியாக
வழங்கும் கவிஞர்களுள்—

தெள்ளு தெளிதேனைச் சீரோடு பாவாக்கும்
கந்த வனத்தின்பேர் நாடறியும் பாவரங்கில்
சந்த முடன்தாளம் சாரக் கருத்துகளைக்
கூடியிருப்போர்கள் கொள்ளக் குணத்துடனே

இன்றைப் புதுமையினை
இயல்பை இசைந்தறிந்து
அன்றை உயர்நெறியை
ஆன்ற அழகமையப்

பாட்டில் கலந்திடுவார் பாட்டதனை சுவையினிலே
கேட்டோர் உளத்தினிலே கிளர்ச்சி மிதந்துவிடும்

காலத்துக் கிசைவாக
கோலந் தனைப்பூண்டு
சீலம் விடுத்தோரும்
சிரிக்கும் படிபா வில்

சிந்தையினால் நல்விகடம்
தொனிக்கும் கருத்ததனைத்
தந்திடுவார் இவர்பாவில்
தனித்துவப் பார்வையினால்

தோயும் விகடத்தில் துழைக்கும் விசையிருக்கும்
ஆய கலைத்துவமும் அன்பும் உயர்பண்பும்

மெல்ல நுழைந்துவந்து
மேன்மை எதுவென்றே
சொல்லும்; துணிவிருக்கும்
தூய்மை உடன்நேர்மை

பூக்கும் புதுமைவெறி தாக்கும் மனத்தவரை
ஆக்கும் அருளிணைந்த ஆன்றவராய் எப்போதும்

மேற்குற்ற நாகரிகம் மேவி நமதூரில்
காற்சட்டை யங்கியுடன், கனத்த
சடைவைத்துப்
போக்கற்றுச் செல்கின்ற புதுமை இளைஞர்களின்
நோக்கை மெதுவாக நுட்ப விகடத்தால்



இந்நூலிற் பல மேடைகளில், முழக்கத்தோடுமொழிந்த கவிதைகளுள் ஐந்து இடம் பெறுகின்றன. 1963-ம் ஆண்டு முதல் 1968-ம் ஆண்டு வரை யாத்துப் பொழிந்த கவிதைகள் இதில் அடங்கியுள்ளன, மலை நாட்டில் மாத்தளை, நாவலப்பிட்டி ஆகிய இரு இடங்களிலும் அரங்கேற்றப்பட்ட கவிதைகள் முதலிரண்டும். மூன்றாவது நீர்கொழும்பிலும், மற்றிரண்டும் யாழ்ப்பாணத்திலும் அரங்கேற்றப்பட்டவை. இரண்டாவது கவிதையில் மலையக மக்களின் மனக் குமுறல்களை மட்டுமின்றி மொழிவளத்தையும் இணைத்துக் கவிதை புனைந்துள்ளது கவிஞர் கந்தவனம் தான் கவி கூறும் மக்களோடு இதயத்தைப் பிணைத்துவிடும் ஆற்றலுள்ளவர் என்பதற்குச் சான்றாய் அமைந்துள்ளது. ஆறாண்டு கால இடை வெளிக்குள் எழுந்த கவிகளாதலாற் கவிஞனின் வளர்ச்சியையும் கணிக்கக்கூடியதாய் இக்கோவை அமைந்துள்ளது. முதலாவது கவிதையையும், இறுதிக் கவிதையையும் அடுத்தடுத்து வாசிக்கும் பொழுது கவிஞனின் முதிர்ச்சியை எளிதில் உணர்ந்து கொள்ளலாம். இறுதிக் கவிதை அங்கதச்சுவை நிறைந்து மிளிர்கிறது. மேடைக் கவிதைக்கு ஓர் உதாரணமாய் இலங்குகின்றது அதனை ஒரு முறையல்ல, பன்முறை படித்துச் சுவைக்கலாம்.

“நலன்கள் பொலியும் பொலன்கவியால், நாட்டின் பண்பை நன்னெறியில், துலங்கச் செய்யும் துணிவுடைய துங்காப்புகழார்” கவிஞனாகத் திகழ்கின்றார் கவிஞர் கந்தவனம். அவரை நன்கு பழகி, இந்நூலோடு பயிலும் ஒவ்வொருவர் இதயத்திலும், இக்கவிதைகள் சிம்மக் குரலார்த்து நிற்கின்றன.

— இர. சிவலிங்கம்

Rainbow Printers 231, Wolfendhal Street, Colombo-13.